23.09.2022
O.S. 112/2018

D.W.1-Sathishkumar

<u>கு**.**வி**.** தொடர்ச்சி**)**</u>

13.8.2014 தேதியில் 3ம் பிரதிவாதியுடன் நான் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தினை நான் ரத்து செய்துகொண்டேன் என்றால் சரிதான். மேற்சொன்ன ரத்து பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் நான் கிரையம் செய்து கொடுப்பதற்கு தயாராக இல்லை என்றும், 3ம் பிரதிவாதியிடம் பணமில்லை என்றும் காரணம் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நான் எழுதிக்கொடுக்க இயலாது என்று சொல்லவில்லை, அவரிடம் பணப்பற்றாக்குரை என்று கூறினார். நான் சொல்வதுபோல வாசகம் வாதசாஆ.18ல் நம்மில் "**2** வது நபர் மீதி கிரைய தொகையை நம்மில் **1** வது நபருக்கு ரொக்கம் செலுத்தி கிரையம் பெற இயலாமல் இருப்பதாலும்**,** நம்மில் **1** வது நபரும் கிரையம் செய்ய விரும்பாததாலும்" என்றுதான் வாசகம் காணப்படுகிறது என்றால் சரிதான். வாதசாஆ.18 ல் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதன் அடிப்படையில் பணம் திருப்பி கொடுக்கப்பட்டதாக கண்டு எந்த வாசகமும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு கிரையம் செய்து கொடுக்க விருப்பம் இல்லை என்றுதான் வாசகம் கண்டு எழுதப்பட்டிருக்கிறது ஏன் என்றால் உண்மையாகவே கிரையம் செய்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த ஆவணம் ஏற்படுத்தப்படாததால், வீண் விவகாரங்களை ஏற்படுத்தும் நோக்கத்துடன்தான் இதுபோன்ற ஆவணங்களை ஏற்படுத்தி இருக்கிறோம் என்று சொன்னால் தவறு. ஒரு அதிகாரப்பத்திரத்தின் அடிப்படையில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டால் ஆவணம் எழுதிக்கொடுக்கும் அதிகாரம் உடையவர் உயிருடன்தான் இருக்கிறார் என்று விவரம் கண்டு சான்றிதழ் இணைக்கப்படவேண்டும் என்ற வகைபாடு உள்ளது என்றால் இந்த கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் அதுபோன்ற நடைமுறை இல்லை. நான் சொல்வது தவறு, அதிகாரப்பத்திரத்தினை ஏற்படுத்திக்கொடுக்கும் நபர் உயிருடன் இருக்கிறார் என்பதற்கான ஆவணம் இணைக்கப்பட்டால்தான் முகவர் அதிகார பத்திரம் பதியப்படும் என்று சொன்னால் சரியல்ல. நான் முகவர் அதிகாரத்தின் அடிப்படையில் 2,3,4 பிரதிவாதிகளுக்கு பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு முன்னதாக அதன் உரிமையாளரிடம் முன் அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் தவறு. வாதசாஆ.18 ஒரு செல்லாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வாதசாஆ.18 னுடைய ரத்து ஆவணம் ஏற்பட்டதற்கு பின்னிட்டு 3ம் பிரதிவாதி பேரில் தாவா 1,2 இலக்கச்சொத்துக்களைப் பொறுத்து ஒரு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்து அல்லாத வேறு சொத்துக்களைத்தான் 3ம் பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்திருக்கிறேன். 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தினுடைய சர்வே எண், விஸ்தீரணம் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. எந்த தேதியில் எத்தனை ரூபாய்க்கு எழுதிக்கொடுக்கப்பட்டது

என்று விவரம் சொல்லமுடியுமா என்றால் 13.8.2014ம் தேதி சுமார் 11 லட்சத்திற்கு கிரையம் நிர்ணயித்துக்கொண்டு ரூ.5 லட்சம் முன்பணமாக முதல் ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்திலேயே முன்னரே பெற்றுக்கொண்டுவிட்டேன். 3ம் பிரதிவாதிக்கு எந்த சொத்தினை எவ்வளவு தொகைக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் 13.8.2014ம் தேதி சுமார் 13 லட்சம் மொத்த கிரைய தொகையாக பேசி கிரையம் பதிந்து கொடுத்துவிட்டேன். வாதசாஆ.10ல் 2ம் பிரதிவாதி சம்மந்தப்பட்ட கிரையப்பத்திரத்தில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட முன்பணம் ரூ.5 லட்சத்தை கழித்துக்கொண்டு மீதி பணம் கொடுக்கப்பட்டதாக பத்திரத்தில் வாசகம் எதுவும் இல்லை என்றால் அட்வான்ஸ் தொகையை காட்டி பதிந்து கொண்டால் அதற்கு அந்த ஆவணத்தை கேன்சல் செய்தால் Stamp duty செலுத்தவேண்டும் என்ற காரணத்தினால் 2ம் பிரதிவாதிக்கு முழு தொகையும் பெற்றுக்கொண்டதாக கண்டு எழுதப்பட்டுள்ளது. என்னுடைய எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் ஆவணத்தினை ரத்து செய்து கொண்டால் அதற்கு Stamp duty செலுத்தப்படவேண்டியிருக்கும் என்ற காரணத்தினால் முழு தொகையையும் காட்டியதாக கண்டு விவரம் சொல்லவில்லை என்று சொன்னால் அது தேவைப்படாத காரணத்தினால் சொல்லப்படவில்லை. உண்மைக்கு புறம்பாக நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2.2.2013 தேதியிலேயே பதிவுத்துறை தலைவர் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார். அது ஏற்கனவே குறியிடப்பட்டுள்ள வாசாஆ.17ல் எந்த ஒரு முகவர் அதிகார பத்திரத்தினை பதிந்தாலும் அந்த முகவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்ற ஆதாரத்தை இணைத்துதான் தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபோல பதிவாளர் அலுவலகத்தில் எந்த நிபந்னையும் காணப்படவில்லை. பதிவாளர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் சுற்றறிக்கையும் மீறி எனக்கு பதிவுத்துறையில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி சுற்றறிக்கைக்கு முரணாக நான் ஆவணங்களை பதிந்து கொண்டு இருக்கிறேன் என்றால் அது தவறு. நான் எந்த எந்த வங்கிகளில் கணக்கு வைத்திருக்கிறேன் என்றால் கரூரில் உள்ள ஐசிஐசிஐ வங்கியில் கணக்கு வைத்துள்ளேன். என்னுடைய வங்கி கணக்கினுடைய பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன். என்னுடைய வங்கி கணக்கு எண் என்ன என்றால் 607201072080 ஆகும். தனக்கு உறுதியாக தன்னுடைய கணக்கு எண் தெரியவில்லை என்று சாட்சி தெரிவிக்கிறார். தனக்கு சொத்து வாங்குவதற்கு பணமில்லை என்று 3ம் பிரதிவாதி வாதசாஆ.18ல் தெரிவித்திருக்கின்ற நிலையில் 13.8.2014 தேதியிட்ட கிரைய பத்திரம் போலியாக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த ஆவணத்தின்படி பத்திரம் ஏற்படுத்திக்கொண்டு அதில் கண்டுள்ள தொகையை நான் வங்கியில் வரவு வைத்துக் கொண்டேன் என்று சொன்னால் தவறு. ரிசர்வ் வங்கியில் ரூ.50000க்கும் மிகைப்பட்ட தொகைகளை வங்கி மூலமாகத்தான் பணப்பரிமாற்றம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது

என்றால் அப்போது அது நடைமுறையில் இல்லை. 2010ம் வருடத்திலேயே பணப்பரிமாற்றம் வங்கி மூலமாகத்தான் நடைபெறவேண்டும் என்று வகைபாடு இருந்தும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் சொத்தினை மோசடி செய்வதற்காகவே எவ்வித பணப்பரிமாற்றமும் இல்லாமல் என்னுடைய பைனான்சினுடைய பங்குதாரரின் பேரில் பொய்யாக இந்த ஆவணங்களை ஏற்படுத்தியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லுவது போல எந்த ஒரு ஆவணமும் 2ம் பிரதிவாதி பெயரில் எந்த ஒரு கிரைய ஏற்படுத்தப்படவில்லை, நான் உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தினை எழுதியதும், சாட்சி கையொப்பமிட்டது யார் என்றால் அது ஞாபகமில்லை. இதற்கு பயன்படுத்தப்பட்ட முத்திரை தாள் எந்த முத்திரை தாள் விற்பனையாளரிடம் வாங்கப் பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதி பத்திர அலுவலகத்திற்கு சென்று பத்திரம் பதிவு செய்து கொடுக்க இயலாமல் இருப்பதாகவும், அதனால் அதிகார ஆவணம் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதாக எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப் பட்டிருக்கும் விவரங்கள் அதிகார ஆவணம் வாதசாஆ.4ல் காணப்படவில்லை என்று சொன்னால் பொதுவாக அவ்வாறு எழுதுவதில்லை. அதிகார ஆவணம் என்பது பொதுவாக என்ன வாசகங்கள் கண்டு எழுதப்படுமோ அந்த விவரங்கள்தான் அதில் பதியப்படும் என்றால் சரிதான். பிவாசாஆ.2ல் உள்ள கையெழுத்து மட்டும் Fade ஆக காணப்படுகிறது என்று சொன்னால் நன்றாகத்தான் இருக்கிறது. இந்த ஆவணம் கணேசன் என்பவர் எழுதிக்கொடுத்த ஒப்புகை சீட்டு கிடையாது, இது பொய்யாக என் வசதிக்காக வெற்றுப்பேப்பரில் கையொப்பத்தை மட்டும் பெற்றுக்கொண்டு பின்னிட்டு என்னால் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் தவறு. இந்த ஆவணத்தில் இதை தயார் செய்தவர் பெயரோ, அதற்கு யார் சாட்சிகள் என்ற விவரமோ காணப்படவில்லை என்றால் டாக்டர் கணேசன் அவருடைய அலுவலகத்தில் இருந்து இதனை தயார் செய்து என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். என்னுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ இந்த ஆவணம் கணேசன் என்பவரால் அவரது அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு கொண்டு வந்து கொடுத்த ஆவணம் என்று சொல்லப்படவில்லை என்றால் தேவைப்படாத காரணத்தினால் சொல்லப்படவில்லை. நான் மோசடியாக தயார் செய்த ஆவணத்தினை கணேசன் தயார் செய்து கொண்டு வந்து கொடுத்த ஆவணம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதில் ரெவின்யு ஸ்டாம்ப் ஒட்டப்படவில்லை என்றால் அவர் ஒட்டி தரவில்லை. இந்த ஆவணம் அவர் கொடுத்தது அல்ல, எங்களுடைய பைனான்சில் போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இந்த ரசீதில் எவ்வளவு தொகை என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் கணக்கு வழக்குகளை சரிபார்த்து அவரே இது போதும் என்று சொன்ன காரணத்தினால் பெற்றுக்கொண்டோம். என்னுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ இந்த கணக்கு வழக்கினை பார்த்து இது போதும் என்ற விவரத்தினை கணேசனே தெரிவித்தார் என்று சொல்லப்படவில்லை என்றால் தேவைப்படாத காரணத்தினால் சொல்லப்படவில்லை. வாதியை

குறுக்கு விசாரணை செய்யக்கூடிய காலகட்டத்தில் தான் இந்த ஆவணமே தயார் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. எந்த எந்த சொத்துக்களை எவ்வளவு ரூபாய்க்கு விற்று கொடுக்கப்பட்டதாக விவரம் சொல்லப்படவில்லை என்றால் கணேசனே சரிபார்த்தார், இந்த ரசீது போதும் என்று தெரிவித்தார், தொகையை குறிப்பிடவேண்டாம் என்று கூறிவிட்டார். கணேசனே சரிபார்த்து இந்த ரசீது போதும் என்று தொகையை குறிப்பிடவேண்டாம் என்று கூறிவிட்டார் என்று தற்போது நீதிமன்றத்தில் சொல்லும் விவரத்தை என்னுடைய எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்று சொன்னால் தேவைப்படாததால் சொல்லவில்லை. பார்த்தசாரதி என்பவர் கொரணா காலத்தில் இறந்துவிட்டார் என்றால் யாரோ சொல்லி கேள்விப்பட்டேன். அவரும் எங்கள் பைனான்சில் ஒரு பங்குதாரர், மற்றும் ஏஜண்ட் ஆக இருந்தார். கணேசன் என்பவரிடம் வெற்றுத்தாள்களிலும், பச்சைத்தாளிலும் 5 பூர்த்தி செய்யப்படாத காசோலைகள், மூல ஆவணங்கள், வெற்றுப்புரோநோட், ம்ற்றும் வெற்றுப் பேப்பரில் கையெழுத்து, விபிஎன்.மோட்டார் பைனான்ஸ் ஒரு செட் பார்ம்ஸ், சுஜன் ஆட்டோ பைனான்ஸ் ஒரு செட் பார்ம்ஸ்ல் ஒரு கையெழுத்து, லட்சுமி இன்வெஸ்ட்மெண்ட் பார்ம்ஸ்ல் கையெழுத்து இவை எல்லாம் வெற்றுப்படிவத்தில் வாதியிடம் முத்துக்குமாரும், நானும் சேர்ந்து வாங்கியது, அவ்வாறு பெற்ற காங்கர் படிவம் ஒன்றைத்தான் ஒப்புகை கடிதமாக வடிவமைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் கையொப்பம் மட்டும் Fade ஆகி காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. இந்த பி.1 பி2 ஆவணங்கள் வாதிக்கே தெரியாது. இது உங்கள் வசதிக்காக போலியாக ஏற்படுத்தப்பட்டது. டாக்டர்.கணேசனிடம் இருந்து பெற்றுக்கொண்ட வெற்று பிராமிசரி நோட்டுக்கள் 5ல் இரண்டை, உங்கள் பைனான்சில் பங்குதாரராக இருக்கக்கூடிய விவேகானந்தர் பெயரில் உற்பத்தி செய்து அவரிடம் 8 ½ லட்சம் ரூபாய் கடன் பெற்றது போக போலியாக பிராமிசரி நோட்டை வடிவமைத்து, கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் OS 165/2022 என்ற வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் குறிப்பிடப்பட்ட நபர் எனக்கு தெரியாது, மற்றும் ஒரு சுரேஷ் குமார் என்பவர் மீது இதே கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் OS 167/2022 என்ற வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் அதுபோல சுரேஷ்குமார் என்பவர் மீது எந்த வழக்கும் நான் போடவில்லை. எங்களுடைய பைனான்ஸ் கம்பெனியில் தொழிலில் பொய்யான ஆவணங்களை தயார் செய்து, அதனடிப்படையில் வழக்குகளை தாக்கல் செய்து, பணம் பறிப்பதுதான் தொழிலாக செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. அதிகார ஆவணம் பதிந்த அதே தேதியில் நான் 2ம் பிரதிவாதிக்கு செய்து கொண்டதாக கூறும் கிரைய ஒப்பந்தத்திற்கு முத்திரைத்தாள் எந்த தேதியில் யாரிடம் வாங்கினேன் என்றால் அந்த ஆவணங்களை கணேசன் தான் வாங்கிகொடுத்தார் அதுபற்றி எனக்கு தெரியாது. கணேசன்தான் பத்திரம் வாங்கி கொடுத்தார், அதைபயன்படுத்திதான் கிரைய ஒப்பந்தம் 2ம் பிரதிவாதியோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது என்ற விபரத்தை என்னுடைய எதிர்வழக்குரையிலும், நிரூபண

வாக்குமூலத்திலோ சொல்லப்படவில்லை என்றால் தேவைப்படாததால் சொல்லவில்லை. வா.சா.ஆ.5ல் கணேசன் சாட்சியாக கையொப்பம் எதுவும் இடவில்லை, அவருக்கும் இந்த ஆவணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் எனக்கு பவர் கொடுத்துவிட்டு நீயே பார்த்துக்கொள் என்று மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். தற்போது நான் நீதிமன்றத்தில் கூறும் இந்த விபரத்தை என்னுடைய எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் கூறும் விபரம் என்னுடைய எதிர்வழக்குரையில் எங்குமே சொல்லப்படவில்லை என்றால் நான் பவர் கொடுத்திருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். நான் சொல்வது போல எந்த விபரமும் எதிர்வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லப்படவில்லை, உண்மைக்கு புறம்பாக பொய்யாக சொல்லி இருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.5ல் சாட்சியாக கண்டுள்ள நபர்களுக்கும் எனக்கும் எந்த விரோதமும் இல்லை.

V R LATHA Digitally signed by V R LATHA Date: 2022.09.23 17:20:42 +0530

Prl.District Judge,
Dindigul.